தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 29, விசு—திருவள்ளுவர் ஆண்டு 2033

2002 மார்ச் 13, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்

தாழாது உஞற்று பவர்க்கு."

தம்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு முயலுகிறவர்களுக்குத் தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்துவிடும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 11, திரு. தா. பச்சைமால், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

11—

திருப்பணி

***2266—திரு. தா. பச்சைமால் :**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை கும்பாபிஷேகம் நடத்தப்படாமல் உள்ள இந்துக் கோயில்களில் அரசே திருப்பணி நடத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2002 மார்ச் 13

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்தில், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில், பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து குடமுழுக்குச் செய்யப்பட வேண்டிய திருக்கோயில்களின் எண்ணிக்கை 318. இதில் 20 திருக்கோயில்களுக்கும், துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ள 9 திருக்கோயில்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டு, திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருப்பணி நடைபெற்றுவரும் 20 கோயில்களில் ஒரு கோயிலில் திருப்பணி முடிவுபெற்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

திரு. தா. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பழம்பெருமை வாய்ந்த பல ஆலயங்கள் உள்ளன. அவற்றில் சுசீந்திரம் தாணுமாலய மூர்த்தி ஆலயம், வடசேரி கும்மண்டையம்மன் ஆலயம், கட்டிமாங்கோடு சிவன், கிருஷ்ணன் ஆலயங்கள், பிள்ளையார்விளையில் சிவன் ஆலயம் இப்படிப் பல ஆலயங்களில் பல இலட்சம் ரூபாய்க்கு வருமானம் இருந்தும், இன்றுவரை எந்தவித கட்டடப் பணியோ, ஆலயப் பணியோ நடைபெறாமல் இருக்கிறது. அந்த ஆலயங்களைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மொத்த திருக்கோயில்கள் விவரம்: இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம் 1959, சட்டப் பிரிவு 49(1)-ன்கீழ் 630 ஆலயங்கள்; சட்டப்பிரிவு 46(1)ன் கீழ் 55 ஆலயங்கள்; சட்டப் பிரிவு 46(2)-ன்கீழ் 3 ஆலயங்கள்; சட்டப் பிரிவு 46(3)ன்கீழ் ஒரு ஆலயம்; ஆக மொத்தம் 689 ஆலயங்கள். அவற்றில் 12 ஆண்டுகள் கடந்து குடமுழுக்குச் செய்ய வேண்டியவற்றின் எண்ணிக்கை 318. பட்டியலில் சேராதவை:

தற்போது நிதி உதவி அளிக்கப்பட்டு திருப்பணிகள் நடந்து கொண்டிருக்கும் திருக்கோயில்கள் விவரம்: இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பட்டியலில் சேராத 20 திருக்கோயில்களுக்கும் மற்றும் பட்டியலில் சேராத, துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ள 9 திருக்கோயில்களுக்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் நிதி உதவி

2002 மார்ச் 13]

வழங்கப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதில் பட்டியலில் சேராத 20 திருக்கோயில்களில் ஒரு கோயிலில் திருப்பணி முடிவுபெற்று கும்பாபிஷேகம் முடிந்துள்ளது. மீதமுள்ள 289 திருக்கோயில்களுக்கு நிதிநிலை அடிப்படையில், படிப்படியாக எதிர்வரும் ஆண்டுகளில் திருப்பணிகளை முழுமையாக முடித்து கும்பாபிஷேகம் நடத்துவதற்குரிய தொடர் நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கவனத்தில் கொண்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே கோயில்களில் திருவிழாக்களை முன்னிட்டு நடைபெறும் வெடி வழிபாடுகளில் சில நேரங்களில் உயிர்ச்சேதம் ஏற்படுகிறது. நேற்று திருநந்திக்கரை என்ற இடத்தில் உள்ள அரசுக்குச் சொந்தமான சிவன் கோயிலில் சிவராத்திரி விழாவையொட்டி.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஹேமச்சந்திரன், கோயில் கும்பாபிஷேகம் சம்பந்தமாகச் சொல்லுங்கள். மற்றவற்றிற்கு அமைச்சரிடம் பதில் இருக்காது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: கும்பாபிஷேக விழாவோடு சேர்ந்த கேள்விதான். அப்படிப்பட்ட வெடி வழிபாடு நேரத்திலே ராஜேஷ் என்ற ஒரு வாலிபன், அவருடைய உடல் சிதறி இறந்து போயிருக்கிறார். இப்படி இறக்கக்கூடியவர்களுக்கு அரசு நிவாரணம் சாதாரணமாக வழங்கப்படுவதில்லை. இப்படிப்பட்ட வெடி வழிபாடுகள் காரணமாக இறக்கக்கூடியவர்களுடைய குடும்பங்களுக்கு ஏதாவது நிதி உதவியோ, நிவாரணமோ வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்ற காலத்தில், அங்கு வருகின்ற பக்தர்கள் தங்களுடைய வசதிக்கேற்ப இப்படிப்பட்ட வெடி விழாக்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். திடீரென்று இப்படி ஒரு விபத்து ஏற்பட்டு இருக்குமானால், அரசு கூர்ந்து கவனித்து அதற்கு வேண்டிய தக்க நடவடிக்கைகளை எடுத்து உதவி புரிவதற்கு முயற்சி எடுக்கும்.